# Assessing critical thinking in media literacy of secondary school students: special focus to Nallur Division of Jaffna District

## உயர்தர மாணவர்களின் ஊடக அறிவு தொடர்பிலான விமர்சனத்திறனை மதிப்பிடல்: யாழ் வலய நல்லூர் கோட்ட 1AB பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டமைந்தது

**P. Rajeswaran**
*Lecturer*
*Jaffna National College of Education, Jaffna, Sri Lanka*

**S. Navaneethakrishnan**
*Assistant Librarian,*
*Library, University of Jaffna, Sri Lanka*
*ksnavan@yahoo.com*

## Abstract

*After an introduction to information and knowledge society concepts, the influx of new media technologies has the potential to affect the library and education sectors radically. To successfully navigate today's data-rich and complex media environment, the concepts of literacy, i.e. media literacy and information literacy becomes an increasingly valuable asset. Media Literacy is similar to information literacy, defined as the ability to access, analyze, evaluate, and produce communication in a variety of forms. Media literacy involves critical thinking, analytical skills, and the ability to express oneself in different ways. The objective of this study is to identify specific aspects on critical understanding skills in media literacy of secondary school students selected from Nallur division of Jaffna district by analyzing critical competency to examine, understand, question, and evaluate the ways in which different media produce meaning. Research method of this study is quantitative analysis. Questionnaire designed by the UNESCO with the reference to Global Media and Information Literacy Assessment Framework has been used as the data collection tool. Using stratified random sampling method, 120 students in secondary level from 5 public high schools in Nallur division of Jaffna district were selected for the survey. The results indicate that the majority of the students have to improve their critical thinking and analytical skills in media. They can differentiate the attraction and reality in the advertisements. Even though most of them (62%) have compared the information received from different media to get the authoritative information; many students have inadequate awareness of media regulation to evaluate the ethics behind it. Majority (85%) of students indicate lack of involvement in any media activities. Fewer students demonstrate skills in conducting critical search and participation in development activities using media. Half of the students never participated in critical discussions or other civic activities in online social networks. Perceptions of media education among students indicate*

*lack of knowledge. Finally, based on the findings from the above survey, it is recommended to implement media literacy development programmes at school level.*

**Keywords:** *Media literacy, Information literacy, School libraries, Education*

**ஆய்வுச் சுருக்கம்**

*அறிவுச் சமூக உருவாக்கத்திற்கான இலங்கையின் கலைத்திட்ட அறிமுகங்களின் பின்னணியில் ஊடகக் கற்கை நெறி பாடசாலை மற்றும் உயர் கல்வி மட்டங்களில் அறிமுகம் செய்யப்பட்டு; கற்றல் கற்பித்தல் நடைமுறைகள் இடம் பெற்று வருகின்றது. வெகுசன ஊடக கலாசார தாக்கங்கள் சமூகத்தில் நேரான விளைவுகளை ஏற்படுத்துகின்ற அதேவேளை ஒப்பீட்டுரீதியில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றமை உணரப்படுகின்றது. இத்தகைய பின்னணியில் ஊடகம் மற்றும் அதன் உள்ளடககம் தொடர்பிலான பயன்படுத்தும் திறன், மதிப்பிடும் திறன், பிரயோகிக்கும் திறன், ஒப்பிடும் திறன், ஆகிய செயன்முறைகளை கொண்டதாக ஊடக அறிவு எண்ணக்கரு அறிமுகம் செய்யப்படுகிறது. "உயர்தர மாணவர்களின் ஊடக அறிவு தொடர்பிலான விமர்சனத்திறனை மதிப்பிடல்" (யாழ் வலய நல்லூர் கோட்ட 1AB பாடசாலைகளை அடிப்படையாக கொண்டமைந்தது) எனும் இவ்ஆய்வு உயர்தர மாணவர்களின் ஊடக அறிவு தொடர்பிலான விமர்சனத்திறனை இனங்காணல், பகுப்பாய்வு செய்தலும் மதிப்பிடலும், ஊடக அறிவு விருத்திக்கான வழிமுறைகளை இனங்கண்டு விதந்துரைத்தலும் பிரதான நோக்கங்களாக கொண்டமைகிறது. இவ் ஆய்வு அளவைசார் ஆய்வு அணுகுமுறையைப் பயன்படுத்தி நல்லூர் கோட்ட 1AB பாடசாலையில் உயர்தர மாணவர்களை ஆய்வுக் குடித்தொகையாக கொண்டு வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகள் கணனி புள்ளிவிபர ஆய்வு முறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இறுதியாக பகுபாய்வின் ஊடாக பெறுபேறுகளின் அடிப்படையில் ஊடக விமர்சன அறிவு மட்டம் தாழ்மட்டத்தில் உள்ளமை கண்டறியப்பட்டது. ஊடக விமர்சன அறிவு மட்டத்தை உயர்த்துவதற்கு பாடசாலை மட்டத்தில் ஊடக அறிவு கலைத்திட்டத்தை அறிமுகம் செய்தல், ஊடக கழக செயற்பாடுகளை விரிவாக்கல், ஊடக அறிவுப் போட்டிகளை நடாத்துதல், ஊடக அறிவு தின நிகழ்வுகளை கொண்டாடுதல், கல்விக் கொள்கை வகுப்பினர் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஊடக கல்விக்கான ஆசிரிய பயிற்சி வாய்ப்புக்களை அறிமுகம் செய்தல், ஊடகத்துறையினருக்கு ஆரோக்கியமான ஊடக பண்பாட்டை கட்டியெழுப்புவதற்கான வாண்மைத்துவ அறிவுட்டல்களை விரிவுபடுத்துதல,பல்கலைக்கழக மட்டத்தில் ஊடக அறிவு ஆய்வுப் புலங்களை விரிவுபடுத்துதல், பொதுமக்களுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டங்களை முன்னெடுத்தல், அரசசார்பற்ற நிறுவனங்கள் சமூகம்- ஊடகம் இணைந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் ஆகிய அணுகுமுறைகள் ஊடாக ஊடக அறிவு விருத்தியை மேம்படுத்த முடியும்.*

## 1.0 அறிமுகம்

இன்றைய தகவல் யுகத்தில் ஊடகங்களின் பயன்பாடு சமூகத்திலும், தனிமனித மட்டத்திலும் மிக உயர்நிலையில் காணப்படுகின்றன. அறிவுச் சமூக உருவாகத்தின் தொழினுட்ப அறிமுகங்கள் புதிய ஊடகங்கள் பலவற்றை வெளிக்கொணர்ந்துள்ளன. தனிநபர் வாழ்க்கையின் பிரதான அடிப்படை தேவைகளில் ஒன்றாக ஊடகங்கள் அதாவது வெகுசன ஊடகங்கள் மற்றும் நவீன ஊடகங்களின் பயன்நிலைகள் அவசியமாகியுள்ளன. உலகமயமாக்கல், பூகோள கலாசார உருவாக்கங்கள், வர்த்தகமயமாக்கல் மற்றும் நவீனமயமாக்கல் எழுச்சிகள் ஊடகங்களின் முதன்மை தன்மையை மேலோங்கச் செயதுள்ளன.